# அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியும் வளங்களும்

## Community Development and Resources of the Analaitivu Area

Thanupa Thavarajah

Department of Geography, University of Jaffna, Sri Lanka
thawnt23@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ் ஆய்வானது அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியும் வளங்களையும் அடிப்படையாகக் கொண்டதாக அமைகின்றது. இவ் ஆய்வினுடைய ஆய்வுப் பிரச்சினையாக அனலைதீவு பிரதேசத்தில் சமூக அபிவிருத்தியானது பின்தங்கிய நிலையிலே காணப்படுவதோடு வளங்களினை சரியான முறையில் பயன்படுத்தாத தன்மையும் காணப்படுகின்றது. அதாவது அனலைதீவு பிரதேசத்தினுடைய வளங்களினை அடையாளப்படுத்தலும் சமூக அபிவிருத்தியில் வளங்களினுடைய முக்கியத்துவமும், அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியில் வளங்கள் சார்ந்த தேவைகள் மற்றும் பிரச்சினைகள், அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியில் வளங்களினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கான தந்திரோபாயங்களினை முன்வைத்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் நோக்கத்தனை அடைந்துகொள்வதற்கு அனலைதீவு பிரதேசம் பற்றிய அறிமுகம் மற்றும் பின்னணி, பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்கள் மற்றும் வளங்களினுடைய பயன்பாடு, தன்மை, சமூக அபிவிருத்தியில் வளங்களின் முக்கியத்துவம், அப்பிரதேசத்தின் வளங்கள் சார்ந்துள்ள பிரச்சினைகள் போன்ற தரவுகள் வினாக்கொத்து, இலக்கு குழு கலந்துரையாடல், நேர்காணல், அவதானம், ஆவணமீளாய்வு, ஆய்வுசார் இலக்கிய மீளாய்வு போன்றவற்றின் ஊடாக தரவுகள் பெறப்பட்டு விபரணப்பகுப்பாய்வின் (Descriptive Analysis) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இவ் ஆய்வின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட முடிவாக ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட வளங்களினை மூலாதாரமாகக் கொண்டு சமூக அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கான வளவாய்புக்கள் காணப்படுகிறது. அவ்வளங்களினை சரியான முறையில் பயன்படுத்தாத தன்மை நிலவுகிறது. மக்களிடையே சமுதாய ஒற்றுமை, சமூக பங்குபற்றல், சமூக நல்லிணக்கம், சமுதாய நியமங்களினை பின்பற்றல் போன்ற சமூக கூட்டுணர்வினை கொண்டுள்ளனர். ஆனால் மக்களிடையே கல்வி ரீதியாக படிபறிவற்றவர்களாயினும் சமுதாய வாழ்வின் அனுபவக்கற்றலின் ஊடாக சமுதாய அபிவிருத்திக்கு தேவையான நடைமுறைப்படுத்தக்கூடிய பல்வேறு திட்டங்கள் மற்றும் திட்ட முன்மொழிவுக்கான ஆலோசனைகள், பிரச்சினைக்கான தீர்வுகள் போன்றவற்றினை முன்வைக்கக்கூடியவர்களாக உள்ளனர். ஆகையினால் ஆய்வுப்பிரதேசத்தின் சமூக அபிவிருத்தியில் வளங்களினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்காக சமூக அணிதிரட்டல் மற்றும் சமூக வலுவூட்டலினை மேற்கொள்ளல், சரியான முறையில் வளங்கிளை ஒதுக்கீடு

செய்தலும் வினைத்திறனான வளநுகர்வும், புதிய நிதி வளங்களினை உருவாக்குதல், சமூக மக்களின் பங்குபற்றலுடனான அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் போன்ற நடைமுறைக்கு சாத்தியமான வழிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டன. இதனை அமுல்படுத்தும் சந்தர்பத்தில் ஆய்வுப் பிரதேசமானது சமூக அபிவிருத்தியால் நிலையான சமூகமாக மாற்றமடையும்.

**திறவுச் சொற்கள் :** சமூக அபிவிருத்தி, சமூக வளங்கள்

## 1. அறிமுகம்

இன்றைய அபிவிருத்தி பற்றிய கருத்தியல்களிலே சமூக அபிவிருத்தி என்பது முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. வெறுமனே பொருளாதார அபிவிருத்தி மட்டுமல்லாது சமூக ரீதியான விழுமியங்கள், வழக்கங்கள், வாழ்க்கைத்தரம் என்பவற்றையும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. சமூகம் என்பது நபர்களினைக் கொண்ட ஒரு கூட்டமாக காணப்படுவதனால் அந்நபர்களின் ஆற்றல்கள், எண்ணப்போக்குகள் மற்றும் உணர்வுகள் என்பவற்றை சிறந்த முறையில் மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுதல் அவசியமானதாகும். சமூக அபிவிருத்தி மூலமாக இவை அனைத்தும் திட்டமிட்ட மாற்றத்தின் அடிப்படையிலே மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே சமூக அபிவிருத்தி ஒரு செயன்முறையாக, ஒரு திட்டமாக, ஒரு இயக்க வடிவமாக வளர்ந்து கொண்டு வருகிறது எனலாம். சமூக அபிவிருத்திக்கு பல்வேறுபட்ட வளங்கள் தேவைப்படுகின்றன. இவ் வளங்கள் சிறப்பாக போதிய அளவு காணப்படுமிடத்து சமூக அபிவிருத்தியை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

சமூக அவிவிருத்தியானது சுய உதவி (Self Help), பரஸ்பர ஒத்துழைப்பு (Mutual Support), சமூகத்தை அணிதிரட்டி கட்டியெழுப்புதல், பிரச்சினைகளை தீர்த்தல், சுய பிரதிநிதித்துவத்திற்கான சமூக இயலளவை விருத்தி செய்தல் போன்றவற்றை வலியுறுத்துவதன் ஊடாக பார்க்கப்படுகிறது. இதற்கு ஏற்ப சமூக திட்மிடலானது சமூகத்தின் தேவைகள், பிரச்சினைகளை மதிப்பிடுதல், அவற்றை எதிர்கொள்வதற்கான தந்திரோபாயங்களினை முறையாகத் திட்டமிடல் என்பவற்றுடன் சம்மந்தப்பட்டதுடன், சமூக நிலைமைகளினுடைய பகுப்பாய்வு, சமூக கொள்கைகள், இலக்குகளை சீராக்குதல், சேவை நிகழ்ச்சிகளை வடிவமைத்தல், குறிப்பிட்ட நோக்கத்திற்கு வளங்களை அணிதிரட்டல், சேவைகளையும் நிகழ்ச்சிகளையும் அமுல்படுத்தல், மதிப்பிடுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.

சமூக அபிவிருத்தி தொடர்பாக கிம் (Kim 1973) இனுடைய வரைவிரக்கணம் ‘‘வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் குறிப்பாக சமூக, பொருளாதார நிதி, பொருளாதார செழிப்பு, அரசியற் சுதந்திரம், சுகாதாரம், கல்வி என்பவற்றில் தமக்குரிய பங்கினை பெறமுடியாதாவாறு மறுக்கப்பட்ட மக்கள் எந்தளவிற்கு அவற்றினைக் கேட்கவும், பெறவும் முடிகிறது என்பதனை பொறுத்ததே சமூக அபிவிருத்தி’’ என்றார். (மானுடம் 01, பக்கம் 100) சமூக அபிவிருத்தி

பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் (UN 1975) கருத்துப்படி "அனைத்து மக்களுக்குமான வாய்புகளினை அதிகரிப்பதாகும். இதற்காக கல்வி, உடல் நலம், சத்துணவு, வீட்டு வசதி, சமூக நலம் சார் வாய்ப்புக்களை விரிவாக்குதல் மற்றும் சூழல் சர்பான வாய்ப்புகளையும் வழங்குதலாகும்" (மானுடம் 01, பக்கம் 100).

சமூக அபிவிருத்தியென்பது இன்று பரந்த பொருளில் வாழ்வின் அனைத்து சமூக, பண்பாட்டு கூறுகளையும் உள்ளடக்கியதாக வளர்க்கப்படுகிறது. சமூக அபிவிருத்தியானது சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை கவனத்தில் எடுத்து அபிவிருத்தி செயற்பாடுகள் மூலம் சமூக அங்கத்தவர்களின் வாழ்க்கை மேம்பாட்டை அதிகரிக்கச் செய்கின்றது. எனவே சமூக அபிவிருத்தியினுடைய இலக்கு சமூகத்தில் வாழ்ந்து வரும் பிரஜைகளின் எண்ணப்போக்குகள் மற்றும் அபிலாசைகள் என்பவற்றை சிறந்த முறையில் மாற்றியமைத்து அவர்களுடைய ஆக்கத்திறன்களை வளர்த்தெடுத்து அதற்கூடாக அபிவிருத்தி செயன்முறையை துரிதப்படுத்துவதாகவே இருந்து வருகிறது.

ஒரு வினைத்திறனான சமூக அபிவிருத்தியை அடைவதற்கு இருக்க வேண்டிய அம்சங்களாக நன்கு திட்டமிடப்பட வேண்டும், நீண்ட கால முயற்சியாக இருத்தல், முழுமையானதும் சமத்துவமானதாகவும் இருக்க வேண்டும், நேர்மையானதாகவும் ஒன்றிணைக்கப்பட்டதுமான முழுவடிவமைப்பினைக் கொண்டதாக இருக்க வேண்டும், அபிவிருத்தியின் அடித்தளமானது அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும், இவற்றினூடாக தரமான முன்னேற்றமான வாழ்க்கைத்தரம் உருவாகும். இதனால் சமூக அங்கத்தவர்களிடையே பங்குபற்றும் பொறுப்பு, பரஸ்பர நன்மைகள் என்பன ஏற்படுகின்ற பொழுது சமூகத்தின் இயலளவு அதிகரிக்கும். சமூக பண்பாட்டுச்சூழல் பொருளாதார விடயங்களில் இணக்கத் தொடர்பு ஏற்பட வழியுன்டு. சமூகத்தில் பண்படுத்தப்பட்ட செயற்பாடுகள் உருவாகுவதற்கான விருப்பங்கள் உருவாகும். இதனூடாக சமூக அபிவிருத்தியானது இலகுவாக அடையப்படுகின்றது.

சமூகங்கள் தங்களுடைய தற்போதைய நிலையிலிருந்து உயர்வான நிலைக்கு தாமாகவே உயர்வடைவதற்கு பின்வரும் ஐந்து மூலதனங்களை பெறவேண்டும். மனித மூலதனம் (Human Capital), சமூக மூலதனம் (Social Capital), நிதி மூலதனம் (Financial Capital),இயற்கை மூலதனம் (Natural Capital), பௌதீக மூலதனம் (Physical Capital) என்பனவாகும். இதில் மனித மூலதனமும், சமூக மூலதனமும் இணைந்து சமூக ரீதியான வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன. நிதி மூலதனமும், இயற்கை மூலதனமும், பௌதீக மூலதனமும் இணைந்து சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.

சமூக அபிவிருத்தி மூலமாக சமூகத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கங்களாக வாழ்க்கைத்தரத்தினை அதிகரிக்கச் செய்தல், பொருளாதார சமூக செயற்பாடுகளின் இடம்சார் வடிவம், உற்பத்தி முறைமையும் ஒழுங்கமைப்பும். இவை சமூக அபிவிருத்தின் மூலமாக அடையப்பட வேண்டியவை. இவற்றுடன் சமூக விழுமியங்கள், கலச்சார விழுமியங்கள், சமூக

விளைவுகளும் தாக்கங்களும் என்பன பற்றிய விடயங்கள் சமுதாய அபிவிருத்தியிலே பகுப்பாய்வு செய்யப்பட வேண்டியவையாகவுள்ளன.

## 2. ஆய்வுப் பிரதேசம்

**உரு – 01 ஆய்வுப்பிரதேச அமைவிடம்**

**அனலைதீவு**







இலங்கையின் வட மாகாணத்தின் யாழ்ப்பான மாவட்டத்தில் ஊர்காவல்துறை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அனலைதீவு வடக்கு மற்றும் அனலைதீவு தெற்கு ஆகிய கிராம நிலதாரி பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளே இவ் ஆய்வின் ஆய்வுப் பிரதேசமாகும். அனலைதீவு வடக்கு மற்றும் தெற்கு கிராம நிலதாரி பிரிவுகளானது 1,485.09 ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்டதும் அனலைதீவு வடக்கு - பரித்தித்தீவு, அனலைதீவு தெற்கு - புளியந்தீவு ஆகிய 04 கிராமங்களினையும் மொத்தமாக 1824 மக்கள் தொகையினையும் (2018) கொண்டமைந்துள்ளது.

## 3. நோக்கங்கள்

அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியும் வளங்களும் எனும் இவ் ஆய்வினது நோக்கங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

1. அனலைதீவு பிரதேசத்தினுடைய வளங்களினை அடையாளப்படுத்தலும் சமூக அபிவிருத்தியில் வளங்களினுடைய முக்கியத்துவமும்.
2. அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியில் வளங்கள் சார்ந்த தேவைகள் மற்றும் பிரச்சினைகள்.
3. அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியில் வளங்களினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கான தந்திரோபாயங்களினை முன்வைத்தல்.

## 4. முறையியல்

ஆய்வினுடைய நோக்கங்களினை அடைந்து கொள்வதற்காக ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மொத்த சனத்தொகையினை 2018 ஆம் ஆண்டு தரவுகளிற்கமைய 1824

மக்கள் தொகையினை குடியாகக் கொண்டு கிராமநிரதாரி பிரிவுகளின் கிராமங்களினை அடிப்படையாகக் கொண்டு எழுமாற்று மாதிரி எடுப்பு முறை மூலம் 300 குடும்பங்களினை மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டது.

| அனலைதீவு பிரதேசத்தினுடைய வளங்களினை அடையாளப்படுத்தலும் சமூக அபிவிருத்தியில் வளங்களினுடைய முக்கியத்துவமும். | அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியில் வளங்கள் சார்ந்த தேவைகள் மற்றும் பிரச்சினைகள். |
|---|---|

↓

முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு : அவதானம், நேர்காணல், இலக்கு குழு கலந்துரையாடல், வினாக்கொத்து

இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு : ஆவண மீளாய்வு, ஆய்வு சார் இலக்கிய

↓

விபரண பகுப்பாய்வு

↓

அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியல் வளங்களினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கான தந்திரோபாயங்களினை முன்வைத்தல்.

## 5. பகுப்பாய்வு

### 5.1 அனலைதீவு பிரதேசத்தினுடைய வளங்களினை அடையாளப்படுத்தலும் சமூக அபிவிருத்தியில் வளங்களினுடைய முக்கியத்துவமும்.

அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியும் வளங்களையும் அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பிரகாரம் முதலாவது நோக்கமாக அனலைதீவு பிரதேசத்தினுடைய வளங்களினை அடையாளப்படுத்தலும் சமூக அபிவிருத்தியில் வளங்களினுடைய முக்கியத்துவமும்கும். சமூகத்தினுடைய நிலைத்திருப்பிற்கு வளங்கள் மிக முக்கியமானவை.


**உரு – 02 அனலைதீவு பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட வளங்கள் 2020**




#### 5.1.1 மனித வளங்கள்


மனித வளம் என்பது மனிதர்களின் அறிவு (Knowledge), திறன் (Skill), உடல் ஆரோக்கியம் (Healthy Body), அனுபவம் (Experience) என்பனவற்றினை குறிக்கின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட மனித வளங்களானது சனத்தொகை பன்ப ... ாக்கு, உட ... ற்றும் தொ ... மனித வள ...

**உரு – 03 அனலைதீவு பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட மனித வளங்கள் 2020**




அனலைதீவு பிரதேசத்தின் மனித வளத்தில் முக்கியமான கூறாக சனத்தொகையினை பார்க்க வேண்டும். இங்கு 1824 மொத்த மக்கள்தொகையினையும், 522 குடும்பங்களினையும் கொண்டுள்ளது. இங்கு 2012 ஆம் ஆண்டு ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 1781 பேர் மக்கள் தொகையினை சனத்தொகை அடர்த்தியாக கொண்டுள்ளது.

**உரு – 04 அனலைதீவு பிரதேசத்தின் பால்நிலை 2018**




மூலம் - புள்ளிவிபரவியல் திரட்டு 2019, ஊர்காவல்றுறை பிரதேச செயளாளர் பிரிவு

ஆய்வுப்பிரதேசத்தில் மனித வளத்தினை வேலைவாய்ப்பு மற்றும் தொழில் ரீதியாக பார்கின்ற போது விவசாயத்தினை மேற்கொள்வதற்குரிய மண் வளமும் மீன்பிடித்தலினை மேற்கொள்வதற்குரிய கடல் வளமும் காணப்படுவதனால் மனிதவளத்தின் மொத்த

சனத்தொகையில் மீனவர்கள், விவசாயிகள் மற்றும் பண்ணைத் தொழிலாளர்களே அதிகமாளவர்களாகவுள்ளனர்.


**அட்டவணை – 01 ஆய்வுப்பிரதேசத்தின் தொழில் நிலை 2018**

| தொழில் | அனலைதீவு வடக்கு | அனலைதீவு தெற்கு | மொத்தம் |
|---|---|---|---|
| அரச உத்தியோகத்தவர் | 11 | 19 | 30 |
| கூட்டுறவு ஊழியர்கள் | 03 | 04 | 07 |
| விவசாயிகள் | 30 | 70 | 100 |
| பன்னைத் தொழிலாழிகள் | 50 | 90 | 140 |
| மீனவர்கள் | 153 | 31 | 184 |
| மேசன் | 07 | 02 | 09 |
| தச்சன் | 04 | 02 | 06 |
| மின்னியல் சார்ந்த தொழிலக்ள் | 03 | 05 | 08 |
| உணவு தயாரிப்பு | 02 | 03 | 05 |
| அழகுக் கலை | 00 | 02 | 02 |
| ஏனையவை | 02 | 17 | 19 |

மூலம் - புள்ளிவிபரவியல் திரட்டு 2019, ஊர்காவல்றுறை பிரதேச செயளாளர் பிரிவு

ஆய்வுப்பிரதேசத்தில் மனிதவளத்தின் வேலைவாய்பினை பார்கின்ற போது 513 பேர் நிரந்தர வேலையினையும், 164 பேர் தற்காலிக வேலையினையும், 187 பேர் வேலையின்மையிலும் உள்ளனர்.


**உரு – 05 அனலைதீவு பிரதேசத்தின் வேலைவாய்ப்பு தன்மை 2018**




மூலம் - புள்ளிவிபரவியல் திரட்டு 2019, ஊர்காவல்றுறை பிரதேச செயளாளர் பிரிவு

ஆய்வுப்பிரதேசத்தில் தொழில் மற்றும் வேலைவாய்ப்பினை வழங்குகின்ற சிறிய மற்றும் நடுத்தர கைத்தெரழிலினை எடுத்துக்கொண்டால் இங்கு அதிகமாக கைவினைப்பொருட்கள் சார்ந்த கைத்தொழில் 46 வீதமும், உணவு மற்றும் குளிர்பாணங்கள் 33 வீதமும் காணப்படுகிறது.

**உரு – 06 ஆய்வுப்பிரதேசத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் 2018**




மூலம் - புள்ளிவிபரவியல் திரட்டு 2019, ஊர்காவல்றுறை பிரதேச செயளாளர் பிரிவு

ஆய்வுப்பிரதேசத்தின் மனித வளத்தில் கல்வி வசதிகள் பற்றி பார்கின்ற போது 368 மாணவர்களும் 23 ஆசிரியர்களும் 03 பாடசாலைகளுமே காணப்படுகிறது. இதனோடு 04 முன்பள்ளிகளும் உள்ளன. இங்கு அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயமானது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்திலே இரண்டாவது தேசிய பாடசாலையாகவுள்ளது. இப்பாடசாலையில் மட்டுமே உயர்தரத்தில் கலைப்பிரிவு மட்டுமுள்ளது. ஆனால் அப்பிரதேச அனைத்து பாடசாலைகளிலும் ஆங்கிலம், கணிதம், தகவல் தொழில்நுட்பம் (கனணி) மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாத நிலையுள்ளது. ஏன் என்றால் ஆய்வுப்பிரதேசம் தீவுப் பகுதியாகவுள்ளதால் ஏனைய வெளியிடங்களில் இருந்து இப்பிரதேசத்திற்கு வந்து வேலைசெய்வதற்கு விருப்பமில்லாத தன்மையுள்ளது. இதனோடு இப்பிரதேசத்தில் கல்வி கற்ற அரச உத்தியோகத்தவர்களும் வேறு இடங்களுக்கு சென்றுள்ளார்கள். இதனால் இப்பிரதேச மாணவர்களுக்கு முக்கியமான பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமலுள்ளது.

**அட்டவனைண – 02 ஆய்வுப்பிரதேசத்தின் கல்வி நிலை 2018**

| பாடசாலையின் பெயர் | மாணவர்கள் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலை | 83 | 05 |
| அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை | 57 | 06 |
| அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம் | 228 | 12 |
| மொத்தம் | 368 | 23 |

அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியிலேயே மனித வளமானது மக்களின் சுய சக்தியையும், பங்கேற்பினையும் (Participant), அர்ப்பணிப்பினையும் (Commitment) செயன்முறைக்குட்படுத்த முடியும். ஆகையினால் சமூகத்தின் இயலளவு அதிகரித்து அதன் மூலமாக சமூக அபிவிருத்தியை அடைய முடியும்.

- அனலைதீவு பிரதேச மக்கள் தங்களுடைய தேவைகள் மற்றும் பிரச்சினைகளை இலகுவாக இனங்காண்பதோடு அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு தடையான அல்லது பற்றாக்குறையான விடயங்களை அடையாளப்படுத்துகின்றனர்.
- சமூக அபிவிருத்தியில் மக்கள் தங்களை ஒழுங்குபடுத்தி திட்டங்களை திட்டமிடுவதற்கும், அவற்றை அமுல்படுத்துவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் அபிவிருத்தியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.
- சமூகத்தில் நேரான மாற்றத்தினை ஏற்படுத்தவும் நிலைத்துநிற்கக்கூடிய சமூக அபிவிருத்தியை அடைவதற்கு மக்கள் ஆர்வமாகவுள்ளனர். இதனோடு சமூக புறந்தள்ளல்கள் மற்றும் அடக்குமுறைகளை குறைத்து அபிவிருத்திச் செயற்பாடுகளில் அனைத்து மக்களும் உள்வாங்கப்படுகின்றார்கள்.
- சிறந்த தலைமைத்துவத்தை குறிப்பாக பங்குபற்றும் தலைமைத்துவத்தை (Participatory Leadership) உருவாக்குதல் மற்றும் குறித்த சமூகத்தின் பலம் (Strength), பலவீனம் (Weakness), சந்தர்பம் (Opportunity), தடை (Threat) என்பவற்றை (SWOT) இலகுவாக இனங்காணல்.
- சமூக அபாயநிலையைக் குறைத்தல் மற்றும் சமூக ஆற்றல் திறனை மேம்படுத்தலிற்க்கு மக்கள் பங்களிப்பு செய்கின்றனர்.

போன்ற விடயங்கள் அனலைதீவு பிரதேசத்தின் சமூக அபிவிருத்தியில் மனித வளத்தின் முக்கியத்துவங்களாகவுள்ளன. ஆகையினால் எந்த ஒரு அபிவிருத்தியினுடைய நிலைத்திருப்பிற்கும் மனித வளத்தின் பங்களிப்பு அவசியமானதாகும்.

### 5.1.2 நிதி வளங்கள்

எந்தவொரு சமூக அபிவிருத்திச் செயற்பாட்டிற்கும் நிதி வளம் என்பது இன்றியமையாதது. அந்த வகையில் சமூக அபிவிருத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் நிதியானது அவசியமாகவுள்ளது. குறிப்பாக திட்டங்களை அமுல்படுத்துகின்ற போது பாரியளவான நிதியானது தேவைப்படுகின்றது. அனலைதீவு பிரதேசத்தின் சமூக அபிவிருத்திக்கான நிதி வளமானது (Financial Resource for Commubity Development) பல்வேறு மூலங்களிருந்து கிடைக்கப்பெறுகின்றது. கிராமிய அபிவிருத்திச் சங்கம் - 01, மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கம் - 02, சமுர்திதி அமைப்புக்கள் - 04, கனேடியன் அனலைதீவு கலாச்சார ஒன்றியம் - 01 (Analaitivu Cultural Organization Canada – ACOC) கோன்றனவாகும். இலங்கை அரசாங்கத்தினால் நிதி சார்ந்த எந்தவிதமான உதவிகளும் கிடைப்பதில்லை. அங்கு

அதிகமான மக்கள் கனடாவில் வசிப்பதனால் அவர்கள் மூலமாக இயங்கி வருகின்ற கனேடியன் அனலைதீவு கலாச்சார ஒன்றியமானது இப் பிரதேசத்திற்கு தேவையான நிதியுதவிகளை வழங்கிவருகின்றது.

### 5.1.3 இயற்கை வளங்கள்

இயற்கை வளங்களுள் சமூக அபிவிருத்திக்கு பயன்படும் இயற்கையால் வழங்கப்படும் அம்சங்களை உள்ளடக்கியது. இவ் வளங்கள் வரையறைக்குட்பட்டவை. ஆய்வுப் பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட இயற்கை வளங்களாக கடல், மண் - செம்மண், கழிமண், மணல்மண், குளம் - னைநார் குளம், வடலிக்குளம், புளிபந்திபுகுளம், மரங்கள் - தென்னை, பனை, மருந்து மூலிகைத் தாவரங்கள் - கற்றாளை, ஆடாதோடை, ஆமனக்கு, சிறுகுறிஞசான், ஆவரசம்பூ, சுற்றுலா மையங்கள் போன்வற்றைக் குறிப்பிடலாம்.

வரையறைக்குட்பட்ட இயற்கை வளங்கள் சமூக அபிவிருத்தியின் நிலைத்திருப்பினில் செல்வாக்குச்செலுத்துகின்றன. சமூகத்தின் தேவைக்கு ஏற்ப அல்லது கேள்விகளுக்கு ஏற்ப இதன் வழங்கலை (Supply) அதிகரிக்கமுடியாது. எனவே இவ்வளங்கள் அருமையானவை. ஆய்வுப்பிரதேசத்தின் சமூக அபிவிருத்தியில் இயற்கை வளங்களின் முக்கியத்துவங்களாக,

- விவசாயத்தினை மேற்கொள்வதற்கு பொருத்தமான மண் வளத்தினையும் மீன்பிடித்தலினை மேற்கொள்வதற்கான கடல் வளத்திகை் கொண்டுள்ளது.
- சூழலியற் சுற்றுலா பிரதேசங்களையும் (புளியந்தீவு) இயற்கையான முருகைக்கற்கள் மற்றும் பவளப்பாறைகளினையும் கொண்டுள்ளது.
- மருத்துவ தேவைக்கு பயன்படுத்தக் கூடிய இயற்கையான மருந்து மூலிகைகள் காணப்படுகின்றன.
- அதிகளாவான பனைமரங்கள் உள்ளதால் பனை சார்ந்த சிறு கைத்தொழில்கள் மற்றும் கைவினைப்பொருட்களினை உற்பத்தி செய்யப்படுகின்றது. போன்றவற்றினை குறிப்பிடலாம்.

### 5.1.4 பௌதீக வளங்கள்

பயனுறுதியுடைய சமூக அபிவிருத்திக்கு பௌதீக வளங்கள் மிக முக்கியமானவை. இவை மனிதனால் உருவாக்கப்பட்டவையாகும். ஆய்வுப்பிரதேசத்தில் சமூக அபிவிருத்திக்கு உதவும் பௌதீக வளங்களாக வைத்தியசாலை – 02, பாடசாலை – 07, இந்து ஆலயம் - 15,கிறிஸ்தவ தேவாலம் - 05, போக்குவரத்து பாதைகள் - பிரதான வீதி B 193, மின்சார வலையமைப்பு, இராணுவ முகாம் - 01, குடியிருப்புக்கள் - 436 போன்றனவாகும்.

**உரு – 07 ஆய்வுப்பிரதேசத்தினுடைய குடியிருப்புக்களின் தன்மை 2018**




மூலம் - புள்ளிவிபரவியல் திரட்டு 2019, ஊர்காவல்துறை பிரதேச செயளாளர் பிரிவு

சமூக வளங்களுள் சமுதாய மக்கள் (People), சமூக நிறுவனங்கள் (Social Institution), சுயஉதவிக் குழுக்கள் (Self-Help Group), சமூக விழுமியங்கள் மற்றும் நியமங்கள் என்பன அடங்குகின்றன. ஆய்வப்பிரதேசத்தில் இனங்காணப்பட்ட சமூக வளங்களாக விவசாய அமைப்புக்கள், மீனவ சங்கங்கள், கனேடிய அனலைதீவு கலாச்சார ஒன்றியம், நோர்வே மக்கள் ஒன்றியம், சனசமூக நிலையம் - 04, சமுர்த்தி அமைப்புக்கள் - 04, கிராமிய அபிவிருத்திச் சங்கம் - 01, மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்கம் - 02, இளைஞர்கழகங்கள் - 04, விளையாட்டுக்கழகங்கள் - 03, சிறுவர் அமைப்புக்கள் - 02 போன்றனவற்றைக் குறிப்பிடலாம். ஆய்வுப்பிரதேசத்தில் மனிதனுடைய கட்டுமானம் சார்த விடயங்கள் பௌதீக வளங்களாகவும் சமூக அமைப்புக்கள், சமூக விழுமியங்கள் சார்ந்த விடயங்கள் சமூக வளங்ளாகின்றன. சமூக அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை அதிகரிக்க முடிகின்றது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் வாயிலாக அனலைதீவு பிரதேசத்தினுடைய வளங்களை அடையாளப்படுத்தியதுடன் சமூக அபிவிருத்தியில் வளங்களினுடைய முக்கியத்துவத்தினை அறிந்துகொள்ளமுடிகின்றது.

### 5.2 அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியில் வளங்கள் சார்ந்த தேவைகள் மற்றும் பிரச்சினைகள்.

சமூக அபிவிருத்திக்கு பல்வேறுபட்ட வளங்கள் தேவையாகவுள்ளன. அபிவிருத்தி செயற்பாட்டின் ஒவ்வொரு கட்டத்திலும் வளங்களின் பயன்பாடு முக்கியமானது. இவ்வளங்கள் சமூகத்தின் இயலளவு அதிகரிப்பிலே (Community Capacity Building) முக்கிய பங்கு வகிக்கின்றன.

எங்களுடைய சமுதாயம் என்ற சமூக உணர்வுள்ள ஆய்வுப்பிரதேச மக்களிடையே கல்வி ரீதியாக படிப்பறிவற்றவர்களாயினும் சமுதாய வாழ்வின் அனுபவக்கற்றலின் ஊடாக சமுதாய அபிவிருத்திக்கு தேவையான நடைமுறைப்படுத்தக்கூடிய பல்வேறு திட்டங்கள் மற்றும் திட்ட முன்மொழிவுக்கான ஆலோசனைகள், பிரச்சினைக்கான தீர்வுகள் போன்றவற்றினை முன்வைக்கக்கூடியவர்களாக உள்ளனர். ஆனாலும் இப்பிரதேசத்தில் வளங்கள் ரீதியாக சில மட்டுப்பாடுகளும் பிரச்சினைகளும் காணப்படுகின்றன.

- குறிப்பாக ஆய்வுப்பிரதேசத்தில் தொழில்களில் ஈடுபடுபவர்களளில் (510 பேர்) பெரும்பான்மையானவர்கள் (424 பேர்) மீனவர்கள், விவசாயிகள் மற்றும் பன்னைகளில் தொழில்புரிபவர்களே காணப்படுகின்றார்கள். இவர்களுக்கு தேவையான விடயங்களாக விவசாயத்தினை மேற்கொள்வதற்கு போதுமான நீர் கோடை காலங்ளில் கிடைக்காத தன்மையுள்ளது. இவர்கள் ஆனி தொடக்கம் ஐப்பசி வரையான காலப்பகுதியில் விவசாயத்தினை மேற்கொள்ள முடியாதுள்ளது. ஆகையினால் மக்கள் வறுமையான சூழ்நிலையினையும் எதிர்கொள்கின்றனர்.

- மீனவர்களினை எடுத்துக்கொண்டால் ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு தேவையான மீன்பிடி உபகரணங்கள் இன்மை, மீனினை பதப்படுத்துவதற்கான (கருவாடு) வசதி வாய்ப்பக்கள் போதுமானதாகவில்லை.
- மாணவர்களுக்கு முக்கியமான பாடங்களினை (ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், கனணி) கற்பிபிப்பதற்கு ஆசிரியர் தேவையாகவுள்ளது.
- வேலைவாய்ப்பற்றவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கான புதிய தொழில்வாய்ப்பினை உருவாக்க வேண்டியுள்ளது.
- அரசாங்கத்தினால் எந்தவிதமான அபிவிருத்தி திட்டங்களோ, நிதி உதவிகளோ வழங்கப்படுவதில்லை.
- பாடசாலை கல்வியினை முடித்த மானவர்களுக்கு தொழில்வாய்ப்பு சார்ந்து அவரகளுடைய திறனினை விருத்திசெய்ய வேய்ணடிய தேவையுள்ளது.
- சுய கைத்தொழில் சார்ந்து பெண்களுக்கான தையல் பயிற்சிகளினையும் தையல் இயந்திரங்களினையும் வழங்க வேண்டும். ஏன்எனில் அங்கு தையல் செயற்பாடுகளிற்கு ஊர்காவல்துறை செல்லவேண்டியுள்ளது.
- வைத்தியசாலையில் உரிய நேரத்திற்கு அவசர நோயாளிகளுகான மருத்துவத்தினை மேற்கொள்ளமுடியாதுள்ளது.
- ஆய்வுப்பிரதேசத்திற்குள்ளே தினமும் 02 தடவைகள் அரச போக்குவரத்து சபையினால் 01 போருந்து சேவையிலுள்ளது. ஆனால் அனலைதீவிலிருந்து வெளிப்பிரதேசத்திற்கு படகின் மூலமே செல்ல வேண்டும். ஒரு நாளைக்கு 02 தடவைகள் (காலை, மாலை) மட்டுமே படகு போக்குவரத்துள்ளது.
- பொருட்கள் எல்லாவற்றினையும் (குறிப்பாக கட்டமூலப்பொருட்கள்) வெளியிடங்களில் இருந்து படகின் மூலம் கொண்டுவருவதனால் பொருட்களுக்கான விலை அதிகமாகவுள்ளது.

சமூக அபிவிருத்திகாக வளங்கள் சார்ந்து பல்வேறு தேவைகள் மற்றும் பிரச்சினைகள் ஆய்வுப்பிரதேசத்தில் நிலவுகினறன.

## 6. முடிவு

ஆய்வுப்பிரதேசத்தில் சமூக அபிவிருத்தியும் வளங்களும் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவாக அனலைதீவு பிரதேசத்தில் அடையாளப்படுத்தப்பட்ட வளங்களினை மூலாதாரமாகக் கொண்டு சமூக அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கான வளவாய்புக்கள் காணப்படுகிறது. ஆனாலும் அவ்வளங்களினை சரியான முறையில் பயன்படுத்தாத தன்மை நிலவுகிறது. ஆய்வப்பிரதேசத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகள், தேவைகள், பிரச்சினைகான தீர்வுகள் போன்றவற்றினை அங்குள்ள மக்களே முடிவெடுக்கின்றனர். அப்பிரதேசத்தில் காவல் துறை நிலையம் (Police Station) எதுவுமே இல்லை. அந்தளவிற்கு அங்குள்ள மக்களிடையே சமுதாய ஒற்றுமை, சமூக பங்குபற்றல், சமூக நல்லிணக்கம், சமுதாய நியமங்களினை பின்பற்றல் போன்ற சமூக கூட்டுணர்வினை கொண்டுள்ளனர்.

## 7.பரிந்துரைகள் மற்றும் தந்திரோபாயங்கள்

### 7.1 அனலைதீவு பிரதேசத்தினுடைய சமூக அபிவிருத்தியில் வளங்களினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கான தந்திரோபாயங்களினை முன்வைத்தல்.

ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்களினை வினைத்திறனாக பயன்படுத்தி சமூக அபிவிருத்தியினை மேற்கொள்ளவேண்டியதாக உள்ளது. சமூகத்தின் இயலளவினை அதிகரிப்பதற்கு மனித வளங்கள், நிதி வளங்கள், இயற்கை வளங்கள், சமூக வளங்கள் மற்றும் பௌதீக வளங்கள் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன.

- சமுதாய மக்கள் தங்களுடைய சமூகத்தின் எதிர்காலம் குறித்து பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கான அறிவு, திறன், அனுபவம் மற்றும் சமுதாய கூட்டுணர்வினைக் கொண்டுள்ளமையினால் சமுதாய அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடுத்தல்.
- மனித வளத்தினை சமூக அபிவிருத்திக்காக பயன்படுத்துகின்ற போது பால்நிலை சமத்துவம் (Gender Balance) பேணப்பட வேண்டியது அவசியமானது. ஆண், பெண் இருபாலாரினதும் பங்களிப்பு சமுதாய அபிவிருத்திக்கு தேவைப்படுகிறது.
- சமூகத்தின் இயலளவினை அதிகரிப்பதற்கும் (Community Capacity Building), சமூக மக்களின் ஆளுமையினை உயர்துவதனையும் நோக்கமாகக் கொண்டு சமூக அணிதிரட்டல் பயிற்சி (Social Mobilization), சமூக வலுவூட்டல் (Social Empowerment) நிகழ்சித்திட்டங்களை நடாத்துதல். இதன் மூலம் திறன்மிக்க மனித வளத்தினை உருவாக்கி நலிவுற்றவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மீள் எழுச்சி பெறச்செய்வதோடு ஒரு நீடித்த சமூக அபிவிருத்தியில் மனித வளத்தினை பயன்படுத்த முடியும்.
- சமூக அபிவிருத்தியில் மக்களுடைடய எண்ணப்போக்குகள், அபிலாசைகள் மற்றும் நடத்தைகள், சமூக ஒழுக்க விழுமியங்கள் மற்றும் வழக்காறுகள் போன்றவற்றினை கருத்தில் கொண்டு சமூதாய பின்னணி மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப சமூக திட்டமிடலினை (Community Planning) மேற்கொள்ளுதல் அவசியமாகும்.
- சமுதாய அபிவிருத்தியில் சமுதாய பங்குபற்றலுடனான மதிப்பீட்டினை (Participatory Rural Appraisal - PRA) நடைமுறைப்படுத்தல். அபிவிருத்தி செயற்பாடுகளில் திட்டங்களினை தயாரித்தல், திட்ட முன்மொழிவுகள், திட்ட நடைமுறைப்படுத்தல் மற்றுமகண்காணித்தல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளிலும் சமுதாய மக்களின் பங்குபற்றலுடனே மேற்கொள்ளுதல் வேண்டும்.
- இயற்கை வளங்களின் கிடைபனவு தன்மையினைப் பொறுத்து சமூக அபிவிருத்தியை முன்னெடுக்கின்ற போது அபிவிருத்தி இலகுவாக்கப்படுகின்றது. சமூகத்

திட்டமிடலாளர்கள் இயற்கை வளங்களுக்கும், பொருளியலுக்கும், சமூகத்துக்குமிடையே சாதகமான சமநிலையை பேண வேண்டும். குறித்த பிரதேசத்தின் இயற்கை வளங்கள், அவற்றின் பரம்பல் மற்றும் தன்மை என்பவற்றை அடிப்படையாக வைத்து சமூக அபிவிருத்தி திட்டமிடுகின்ற போது வினைத்திறனானதாகவும், நீடித்து நிலைத்திருக்கக் கூடியதாகவும் அமைகிறது.

- ஆய்வுப்பிரதேசமானது விவசாயத்திற்கு சாதகமான மண் வளத்தினையும், மீன்பிடிக்கு தேவையான கடல் வளத்தினையும் கொண்டிருக்கின்ற போது அப்பிரதேசத்திலே விவசாயம் மற்றும் மீன்பிடி மூலமாக சமூக பொருளாதார அபிவிருத்தியோ (Community Economic Development), சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தியோ (Community Based Economic Development) இலகுவாக முன்னெடுக்க முடியும்.
- சமூக அபிவிருத்தியல் வளங்களின் வீண்விரயம், அதிகரித்த வளநுகர்வு, வளச்சுரண்டல், வளங்களின் பொருத்தமற்ற பாவனை என்பவற்றை தவிர்த்து வளப்பாதுகாப்பு, வள ஒதுக்கீடு, வளங்களின் பொருத்தமான பாவனை என்பவற்றை உறுதிப்படுத்த வேண்டும். வரையறைகுட்பட்ட இயற்கை வளங்களினை எதிர்காலத் தேவை கருதி ஒரு பகுதி வளங்களினை சேமித்து வைக்க வேண்டும்.
- சமூக அபிருத்தி தேவைக்கு கனேடிய அனலைதீவு கலாச்சார ஒன்றியத்தினை மட்டும் நம்பியிருக்காது பல்வேறு நிதி மார்க்கங்களை கண்டுபிடிக்க வேண்டும். அரச நிதி, அரச சார்பற்ற நிறுவனங்கள், தனிப்பட்ட அறக்கொடை நிறுவனங்கள் மற்றும் நபர்கள்இ தொன்டு நிறுவனங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் போன்றவற்றின் மூலமாக சமூக நிதியை உருவாக்க முடியும். அபிவிருத்திக்கு செயற்றிட்டங்களுக்கு தேவையான நிதியினை முற்கூட்டியே பாதீட்டின் (Budget) மூலமாக மதிப்பிட்டு பெற்றுக்கொள்ளுதல்.
- சமூக மக்களின் சேமிப்பு மட்டத்தினை உயர்வடையச் செய்து அச்சேமிப்புக்களை எதிர்காலத்திலே முதலீடுகளாக உருவாக்குவது இங்கு முக்கியமானது. முதலீடுகள் உயர்வடைகின்ற போது பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு வாழ்க்கைத்தரம் உயர்வடைய வாய்ப்பேற்படுகிறது.
- சமூக நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள், சமுதாயத் தலைவர்கள் மூலம் சமூக அபிவிருத்திக்கான வழிபடுத்தல்கள், தலைமைத்து பங்கினை மாற்றியமைக்கலாம்.
- சமூகத்தினை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கு பௌதீக வளங்களும் செல்வாக்குச்செலுத்த வேண்டும்.
- விவசாயத்தினை மேற்கொள்வதற்கு கோடை காலங்களில் நீர் பற்றாகுறை நிலவுகின்மையால், அப்பகுதியில் உள்ள குளங்களினை ஆழமாக்கி தரைக்கீழ் நீரினை சேமித்தல், மழை நீரானது அனலைதீவின் வடக்கு பகுதியிலிருந்து தெற்கு

நோக்கி கடலை சென்றடைவதனை தடுப்பதற்கு வடக்கு பகுதியில் தடுப்பணைகளினையும் குளத்தினையும் கட்டுதல்.

- ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் மீனினை பதப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்கள் போன்றவற்றினை இலங்கை அரசாங்கத்தின் மூலமாக பெற்றுக்கொள்ளல்.
- பாடசாலையில் பிரதான பாடங்களினை கற்பிப்பதற்கு ஆசிரியர்களினை நியமித்தல். அதாவது அனலைதீவு பிரதேசத்தினை சேர்ந்த ஆசிரியர்கள் வெளியிடங்களில் சேவையாற்றுவதனால் அவர்களினை சொந்த பிரதேசங்களுக்கு நியமனம் செய்கின்ற போது அங்கு ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதோடு, பகுதி நேர வகுப்புக்களினையும் நடாத்த முடியும்.
- பாடசாலை கல்வியினை கற்று முடித்தவர்களுக்கு அவர்களின் தகுதிக்கு ஏற்ப தொழில் வழிகாட்டல்களினை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் மேற்கொள்வதற்கு அப்பிரதேச சமூக அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- அனலைதீவில் இருந்து வெளியிடங்களுக்கு செல்வதற்கு படகு போக்குவரத்தினை 04 மார்கங்களாக மாற்றுதல். இதனோடு போக்குவரத்துக்கான பணத்தினையும் குறைக்க வேண்டும்.

மேற்கூறப்பட்ட தந்திரோபாயங்கள் மற்றும் பரிந்துரைகளினை நடைமுறைப்படுதுகின்ற போது ஆய்வுப்பிரதேசத்தின் சமூக அபிவிருத்தியானது நிலைத்திருக்ககூடியதாக மாற்றமடையும்.

## 8. முடிவுரை

சமூக அபிவிருத்தி சமூக இயலளவு அபிவிருத்தியின் முக்கிய கருவிகளில் ஒன்றாக நோக்கப்படுகின்றது. சமூக அபிவிருத்திச் செயற்பாட்டின் பிரகாரம் தானாகவே இயலளவு அதிகரிக்கின்றது. ஆகவே இவை இரண்டும் ஒன்றுக்கொன்று இடைத்தொடர்பு கொண்டுள்ளது. ஆனால் இரண்டும் வேறுபட்டவை. சமூக வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், உள்ளார்ந்த சக்தியை விருத்தி செய்தல் என்பவற்றில் இவை இரண்டும் பெரிய பங்கைக் கொண்டுள்ளன. அபிவிருத்திச் செயற்பாட்டில் திட்டமிட்ட மாற்றங்களை நடைமுறைப்படுத்த முயலும் பொழுது அதனால் ஏற்படுகின்ற எதிர்ப்புக்களும் சமூக அபிவிருத்தியினை தடை செய்வதற்கு ஒரு முக்கிய காரணியாக அமைகிறது. குறிப்பாக பிரதேச மக்கள் ஒரு குறிப்பிட்ட எல்லை வரையும் தான் அந்த அபிவிருத்தியினை மேற்கொள்ள இடமளிப்பார்கள். சமூக அபிவிருத்தியென்பது சிக்கல் நிறைந்ததாக கருதப்படுகிறது. இருப்பினும் அச்சமூகத்தில் காணப்படுகின்ற வளங்கள் யாவற்றினையும் வினைதிறனாக பயன்படுத்தி நீடித்து நிலைத்திருக்கும் சமூக அபிவிருத்தி என்ற நோக்கிலே செயற்பட வேண்டும்.

**உசாத்துணைகள்**

James Midgley., & Amy Conley. (2010). *Social Work and Social Development: Theories and Skills for Development Social Work*. New York: Oxford University Press.

Kingslow Marcia, E., & Horton, C. (1998). *An Overview of the Major Asset Building and Community Development Literatures.* Chicago, IL: Kingslow Associates. Retrieved From:http://www.kingslow-assoc.com/images/AssetBldg___CommDev.pdf [Accessed on 10 December 2020].

Meirinawati, I. (2018). *Strategy Community Development Based on Local Resource*. Retrieved From: https://iopscience.iop.org/article/10.1088/1742-6596/953/1/012158/pdf [Accessed on 24 October 2020].

Smith, K. (1996 – 2006). *Community Development, the Encyclopedia of Informal Education.* Retrieved From: www.encyclopaedia.org. [Accessed on 23 October 2020].

சண்முகலிங்கன், எ. (1997). *மானுட மேம்பாட்டின் சமூகவியல்.* (மானுடம் 01). 99 – 103.

டீசில்வா, எ. (1997). *தேசியத் திட்டமிடலின் முழு உளநோக்கும் நடுத்தர காலத்திட்டத்துக்கான அபிவிருத்தி உபாயங்களும்.* (பொருளியல் நோக்கு 03). 27 – 32.

லலிதா, எஸ். (2001). *நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி மற்றும் அதற்கு அவசியமான உத்திகள்.* (பொருளியல் நோக்கு 08/09). 30 – 32.